
தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 218 | 4 Pages | 6.3.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 218 | 4 பக்கங்கள் | 6.3.2025 | வியாழக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்**
**புன்மை தெரிவா ரகத்து**

**விளக்கம்:**
கொலைத்தொழிலினராகிய மக்கள் அதன் இழிவை ஆராய்ந்தவரிடத்தில் புலைத்தொழிலுடையவராய்த் தாழ்ந்து தோன்றுவர்.

# தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றம்




சென்னை, மார்ச். 6

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தை, பாஜக, தமிழ் மாநில காங்கிரஸ், நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட 5 கட்சிகள் புறக்கணித்த நிலையில் 56 கட்சிகள் பங்கேற்றன.

இக்கூட்டத்தில், 2026 மக்கள் தொகை அடிப்படையில் மேற்கொள்ள உள்ள தொகுதி மறுவரையறையை 30 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்க வேண்டும் என்றும் 1977 மக்கள் தொகை அடிப்படையில் வரையறுக்கப்பட்ட தொகுதிகள் மேலும் 30 ஆண்டுகளுக்கு நீடிக்க வேண்டும். தொகுதி மறுசீரமைப்பை 30 ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பதாக பாராளுன்றத்தில் பிரதமர் அறிவிக்க வேண்டும் என தீர்மானம் வாசிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து அனைத்து கட்சிகளின் ஆதரவுடன் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து, அரசியல் வேறுபாடுகளை கடந்து அனைத்து கட்சி கூட்டத்தில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

# இங்கிலாந்து பிரதமர் ஸ்டார்மருடன் மத்திய மந்திரி ஜெய்சங்கர் சந்திப்பு



லண்டன், மார்ச். 6

இங்கிலாந்து மற்றும் அயர்லாந்து நாடுகளுக்கு மத்திய வெளிவிவகாரதுறை மந்திரி ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதன்படி, இங்கிலாந்தில் அந்நாட்டு உள்துறை மந்திரி வெட் கூப்பரை அவர் சந்தித்து பேசினார். இந்த சந்திப்பில், ஆள் கடத்தல் மற்றும் தீவிரவாதம் ஆகியவற்றை எதிர்கொள்ள இணைந்து மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளை பற்றி இருவரும் பேசினர்.

இதேபோன்று தொழில் மற்றும் வர்த்தக துறைக்கான மந்திரி ஜோனாதன் ரெனால்ட்ஸ் உடனும் ஜெய்சங்கரின் சந்திப்பு நடந்தது. இந்நிலையில், இங்கிலாந்து வெளியுறவு மந்திரி டேவிட் லேமியை மத்திய மந்திரி ஜெய்சங்கர் நேரில் சந்தித்து பேசினார்.

அதற்கு முன் பிரதமர் கீர் ஸ்டார்மரையும் அவர் சந்தித்து பேசினார். இதுபற்றி எக்ஸ் சமூக ஊடக பதிவில் மத்திய மந்திரி ஜெய்சங்கர் இன்று அதிகாலை பகிர்ந்து கொண்ட செய்தியில், இங்கிலாந்து பிரதமர் கீர் ஸ்டார்மரை டவுனிங் தெருவில் உள்ள அவருடைய அரசு பங்களாவில் சந்தித்ததில் மகிழ்ச்சி. அப்போது, பிரதமர் மோடியின் சிறந்த வாழ்த்துகளை அவரிடம் தெரிவித்து கொண்டேன்.

இந்த சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கு இடையே இருதரப்பு, பொருளாதார ஒப்பந்தம் மற்றும் மக்கள் ஒருவருடன் ஒருவர் பரிமாற்றங்களை மேம்படுத்துவது ஆகியவற்றை முன்னெடுத்து செல்வது பற்றி விவாதிக்கப்பட்டது என அவர் தெரிவித்து உள்ளார்.

இந்த சந்திப்பில், உக்ரைன் போரில் இங்கிலாந்தின் அணுகுமுறையை பற்றி ஸ்டார்மர், ஜெய்சங்கரிடம் பகிர்ந்து கொண்டார். இந்த பயணம் முடிந்ததும், நாளை அயர்லாந்து நாட்டுக்கு மத்திய மந்திரி ஜெய்சங்கர் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார்.

# அனைத்துக்கட்சி கூட்டம் என்ற ஓரங்க நாடகம் ஜெயக்குமார் விமர்சனம்



சென்னை, மார்ச். 6

தொகுதி மறுசீரமைப்பு விவாதம் தொடர்பான அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கேற்ற அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

★ தொகுதி மறுசீரமைப்பு விவகாரத்தில் நடத்தப்பட்ட அனைத்துக் கட்சி கூட்டம் நாடகமாகவே தோன்றுகிறது.

★ ஓரங்க நாடகம் நடந்தது போல் தான் அனைத்து கட்சி கூட்டம் நடந்தது.

★ அவசரப்பட்டு எதற்காக அனைத்து கட்சி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது?

★ தொகுதி மறுவரையறை குறித்து மத்திய அரசு இன்னும் எதுவும் சொல்லவில்லை.

★ நீட், காவிரி விவகாரம், மீனவர்பிரச்சனையில் தி.மு.க. அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

★ கச்சத்தீவு, காவிரி, நீட் விவகாரத்தில் மாநிலத்தின் உரிமைகளை தாரை வார்த்தது போல் இதனையும் விட்டு விடாதீர்கள்.

★ 1971 மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, 848 எம்.பி. இடங்களை அதிகரிக்க வேண்டும்.

★ தமிழ்நாட்டை தி.மு.க. தான் காப்பாற்றுவது போல் தோற்றத்தை உருவாக்க நாடகம்.

★ நாடகம் விடும் நேரம்தான் உச்சகாட்சி நடக்குதம்மா என்ற கமல் பாடலைப்போல் தான் அனைத்து கட்சி கூட்டம் நடந்தது என்று கூறினார்.

# பாகிஸ்தானில் ராணுவ வளாகம் மீது தாக்குதல்; 9 பேர் பலி



பெஷாவர், மார்ச். 6

பாகிஸ்தானின் வடமேற்கில் கைபர் பக்துன்குவா மாகாணத்தில் பன்னு என்ற பகுதியில் ராணுவ வளாகம்மீதுதற்கொலை வெடிகுண்டு தாக்குதல்காரர்கள் சிலர் வெடிகுண்டுகள் நிரப்பிய 2 கார்களை கொண்டு சென்று மோத செய்து, அவற்றை வெடிக்க செய்தனர்.

இந்த தாக்குதலில், பொதுமக்களில் 9 பேர் உயிரிழந்தனர். அவர்களில் 3 பேர் குழந்தைகள். 2 பேர் பெண்கள். 20 பேர் காயம் அடைந்து உள்ளனர். 8 வீடுகள் வரை அந்த பகுதியில் சேதமடைந்தன.

இதனை தொடர்ந்து பயங்கரவாதிகள் 12 பேர் அந்த ராணுவ வளாகத்திற்குள் புகுந்து செல்ல முயன்றனர். எனினும், வீரர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில், 6 பயங்கரவாதிகள் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதலுக்கு ஹபீஸ் குல் பகதூர் ஆயுத குழு பொறுப்பேற்றது. 2001ம் ஆண்டு முதல் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டணி படைக்கு எதிரான போரில் ஆப்கானிஸ்தான் தாலீபானுக்கு ஆதரவாக இந்த ஆயுத குழு ஈடுபட்டு வருகிறது.

இதே மாகாணத்தில் சில நாட்களுக்கு முன் இஸ்லாமிய மத பள்ளியில் நடந்த தற்கொலை வெடிகுண்டு தாக்குதலில் 6 பேர் கொல்லப்பட்டனர். இந்த சூழலில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.

# அனைத்து கட்சி கூட்டம்; பா.ஜ.க. செய்தது வரலாற்றுப் பிழை திருமாவளவன்



சென்னை, மார்ச். 6

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான அனைத்து கட்சி கூட்டம் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்றது. இதில் தி.மு.க., அ.தி.மு.க., மக்கள் நீதி மய்யம், வி.சி.க., பா.ம.க. உள்பட சுமார் 53 கட்சிகளை சேர்ந்த தலைவர்கள் கலந்து கொண்டனர். பா.ஜ.க., நாம் தமிழர், தமிழ் மாநில காங்கிரஸ் ஆகிய கட்சிகள் பங்கேற்கவில்லை.

இந்த கூட்டத்தில் மக்கள் தொகை அடிப்படையிலான தொகுதி மறுசீரமைப்புக்கு எதிராக தீர்மானத்தை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்மொழிந்தார். தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான கோரிக்கைகள், போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவும், மக்கள் மத்தியில் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தென் மாநிலங்களில் இருந்து எம்.பி.க்களைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய 'கூட்டு நடவடிக்கை குழு' ஒன்றை அமைத்திட அனைத்து கட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில், அனைத்து கட்சி கூட்டத்தில் பா.ஜ.க. பங்கேற்காமல் தவிர்த்தது வரலாற்றுப் பிழை என திருமாவளவன் விமர்சித்துள்ளார். இது குறித்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது;

"தொகுதி மறுசீரமைப்பு விவகாரம் தொடர்பாக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் எடுத்திருக்கும் முயற்சி மிகவும் வரவேற்கத்தக்கது. அகில இந்திய அளவில் ஏற்கனவே இது விவாதிக்கப்பட்டு வருகிறது. தி.மு.க. முதலில் இந்த கூட்டத்தை கூட்டியிருக்கிறது என்றாலும் கூட, தி.மு.க.வே கற்பனையாக இந்த கருத்தை முன்வைக்கவில்லை.

பா.ஜ.க.வினர் திட்டமிட்டு அரசியல் பேசுகிறார்கள். இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை. ஆகவே, இந்த கூட்டத்தில் பா.ஜ.க. கலந்து கொள்ளாமல் தவிர்த்தது வரலாற்றுப் பிழை. அவர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்தை தெரிவித்திருக்க வேண்டும்.

இந்த கூட்டத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் சில தீர்மானங்களை முன்மொழிந்தார். அதை நாங்கள் வரவேற்று பேசியிருக்கிறோம். தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்தக் கூடாது. அவ்வாறு உயர்த்தினால் இந்தியா முழுவதும் ஒரே சதவிகிதத்தின் அடிப்படையில் உயர்த்தலாம் என்பதையே வி.சி.க.வின் கருத்தாக முன்வைத்திருக்கிறோம்."

இவ்வாறு திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் பொற்காலம் தொடங்கிவிட்டது டிரம்ப்

வாஷிங்டன், மார்ச். 6

அமெரிக்காவின் 47வது ஜனாதிபதியாக டொனால்ட் டிரம்ப் கடந்த ஜனவரி மாதம் பதவியேற்றதற்குப் பின்னர் நாடாளுமன்றத்தில் முதல்முறையாக உரையாற்றினார். எதிர்க்கட்சிகளிடன் கடும் அமளிக்கிடையே ஜனாதிபதி டிரம்ப் பேசியதாவது:

அமெரிக்க ஜனாதிபதியாக நான் பொறுப்பேற்றவுடன் அமெரிக்காவின் பொற்காலம் தொடங்கிவிட்டது. அமெரிக்கர்களின் கனவை நினைவாக்க உழைத்து வருகிறோம். கடந்த 6 வாரங்களில், நான் கிட்டத்தட்ட 100 நிர்வாக உத்தரவுகளில் கையெழுத்திட்டுள்ளேன், 400க்கும் மேற்பட்ட நிர்வாக நடவடிக்கைகளைஎடுத்துள்ளேன்.நான்பதவியேற்றசிலமணிநேரங்களுக்குள், அமெரிக்காவின் தெற்கு எல்லையில் அவசரநிலையை பிரகடப்படுத்தினேன். நமது நாட்டின் மீதான படையெடுப்பைத் தடுக்க அமெரிக்க ராணுவத்தையும் எல்லைப் படையையும் நான் நிறுத்தினேன். இதன் விளைவாக, கடந்த மாதம் சட்டவிரோதமாக நாட்டுக்குள் வருபவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அமெரிக்க வரலாற்றில் மிக மோசமான முந்தைய ஆட்சிக்காலத்தில், ஒரு மாதத்தில் லட்சக்கணக்கான மக்கள் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழைந்திருந்தனர். பெரும்பாலான நிர்வாகங்கள் 4 அல்லது 8 ஆண்டுகளில் நிறைவேற்றியதைவிட 43நாட்களில்நாம்அதிகமாகச்சாதனைசெய்துள்ளோம் என தெரிவித்தார்.

# தொகுதி மறுவரையறை எனும் பேச்சை யார் கிளப்புகிறார்கள்? கமல்ஹாசன் கேள்வி

சென்னை, மார்ச். 6

அனைத்துக்கட்சி கூட்டத்தில் மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல்ஹாசன் ஆற்றிய உரை குறித்து தலைமை கழகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

மக்கள் தொகை அடிப்படையிலான பாராளுமன்றத் தொகுதிகளின் மறுவரையறை என்பது தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல ஆந்திரா, கர்நாடகா, கேரளா, பஞ்சாப், ஒடிசா, மேற்கு வங்காளம், இமாச்சல், உத்தராகாண்ட், வட கிழக்கு போன்ற மாநிலங்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்த வல்லது என்பதை உணர்ந்து அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக்கும் தமிழக முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கும், மக்கள் நலனுக்காக கொள்கை முரண்களை ஒதுக்கிவிட்டு இந்தக் கூட்டத்தில் பங்கேற்றிருக்கும் தமிழ் நாட்டின் பிற கட்சிகளையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

வருமுன்னர்க்காவாதான்வாழ்க்கை தீயிலிடப்பட்ட வைக்கோல் போல கருகிவிடும் எனும் வள்ளுவனாரின் இலக்கணப்படி இந்தத் தேசத்தை ஆபத்து சூழும் முன் நாம் இங்கே குழுமி இருக்கிறோம். இரண்டாண்டுகளுக்கு முன்னர் நடந்த இந்தியா டுடே மாநாட்டில் என்னிடம் 'தொகுதி மறுவரையறை' பற்றிய கேள்வி எழுப்பப்பட்டபோது தேச வளர்ச்சிக்காக ஒத்துழைத்து மக்கள் தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்கள் தண்டிக்கப்படலாகாது.

இந்த விவகாரத்தில் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய இரண்டு முக்கிய அம்சங்கள் ஜனநாயகமும், கூட்டாட்சித் தத்துவமும். இந்த இரண்டுமே இரண்டு கண்களைப் போன்றது. இந்த இரு கண்களை வைத்துத்தான் ஒரே பார்வையில் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியடைந்த இந்தியா எனும் லட்சியத்தை அடைய முடியும்.

1976லும் சரி 2001லும் சரி அப்போது இருந்த இந்தியப் பிரதமர்கள் வெவ்வேறு கட்சிகள், வெவ்வேறு கொள்கைகளைக் கொண்டவர்களாக இருந்தாலும் கூட்டாட்சித் தத்துவத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மக்கள் தொகை அடிப்படையிலான நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறையை கையில் எடுக்கவில்லை. 1976ல் இந்தியா ஒரு பின் தங்கிய நாடாக உலக அரங்கில் கருதப்பட்டது. அப்போது நமது மக்கள் தொகை 55 கோடி. நமது நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 543, கடந்த 50 ஆண்டுகளில் நமது மக்கள் தொகை 145 கோடியாக உயர்ந்த போதும், இதே 543 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்போடு நாம் முன்னேறி இருக்கிறோம்.

ஜனநாயகமும், கூட்டாட்சித் தத்துவமும் தேசிய அளவில் நிலைபெற்றிருக்கஇந்தஎண்ணிக்கை போதுமானது என்பதையே இது குறிக்கிறது. ஆகவே மக்களவையிலும் சரி மாநிலங்களவையிலும் சரி தற்போதுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை மாற்ற வேண்டிய அவசியமே இல்லை என்பதே மக்கள் நீதி மய்யத்தின் கருத்து. தேர்தல் அரசியலில் எந்தக் கூட்டணி வென்று ஆட்சிக்கு வந்தாலும், எங்களது நிலைப்பாடு இதுதான்.

மத்திய அரசு தீட்டுகிற திட்டங்கள் எதுவாக இருந்தாலும், அவற்றை பெரும்பாலும் நடைமுறைப்படுத்துவது மாநில அரசுகள்தான். மக்கள் தொகைக்கு ஏற்ப அதிகரிக்கப்பட வேண்டியது சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைதானே தவிர நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அல்ல. இவையெல்லாம் தவிர, எந்தத் தேவையும் இன்றி நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை எனும்பேச்சையார்கிளப்புகிறார்கள்? எந்த நேரத்தில் பேசுகிறார்கள்? எதற்காகப் பேசுகிறார்கள் என்பதும் கவனத்துக்குரியது.

மாநிலங்களின்உரிமைகளில்தலையிடுகிற, வருடாந்திர பட்ஜெட்டில் தேர்தல் வரவிருக்கிற மாநிலங்களுக்கு மட்டுமே அதிக நிதி ஒதுக்குகிற, தமிழ்நாட்டிற்கான நியாயமான நிதிப்பகிர்வை மறுக்கிற, பேரிடர்க் காலங்களில் நமது கூக்குரலுக்குச் செவி சாய்க்காத, மும்மொழிக் கொள்கை எனும் பெயரில் ஹிந்தியைத் திணிக்கிற, என் பேச்சைக் கேட்டால்தான் நிதி தருவேன் என மிரட்டுகிற ஒரு நடுவண் அரசு யதேச்சதிகாரமாக எடுக்கிற முடிவு இது. அடுத்து, எந்த நேரத்தில் எடுக்கிறார்கள் என்பதையும் பார்க்க வேண்டும்.

கொரானாவைக் காரணம் காட்டி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தாமல் விட்டு விட்டு அதை 2026ல் செயல்படுத்துவதன் நோக்கமே தனக்கு சாதகமான களநிலவரம் கொண்ட இந்தி பேசும் மாநிலங்களை ஓரணியில் திரட்டி அறுதிப் பெரும்பான்மையுடன் தேர்தலை வெல்வதுதான். நாம் கனவு காண்பது அனைவரையும் உள்ளடக்கிய இந்தியா, இவர்கள் உருவாக்குவது 'ஹிந்தியா'

உடையாத பொருளை என் ஒட்ட வைக்க முயற்சிக்கிறீர்கள்? தவிர, நன்றாக ஓடிக்கொண்டிருக்கும் ஜனநாயகத்தை அடிக்கடி பணிமனைக்கு அனுப்பவேண்டியதும் இல்லை, எந்த வகையில் பாராளுமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்தாலும் அதனால் பாதிக்கப்படப் போவது ஹிந்தி பேசாத மக்கள் வாழும் மாநிலங்களே. கூட்டாட்சித் தத்துவத்தைக் கேள்விக்குள்ளாக்கும் இந்த முயற்சி தேவையற்றது.

இன்றல்ல, நாளையல்ல எப்போதுமே பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் கொண்டு வராமல் இருப்பதே ஜனநாயகத்தையும், கூட்டாட்சித் தத்துவத்தையும் இந்தியாவின் பன்மைத்துவத்தையும் காக்கும் என்பதை ஓர் இந்தியனாகவும், தமிழனாகவும், மக்கள் நீதி மய்யத்தின் சார்பாகவும் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பத்திரிக்கை நிருபர்கள் எனக்கூறி நிதி நிறுவன உரிமையாளரை மிரட்டி பணம் பறிக்க முயன்ற 8 பேர் கைது




பத்திரிக்கை நிருபர்கள் எனக்கூறி, மிரட்டி பணம் பறிப்பதாக பல்வேறு புகார்கள் வந்த நிலையில் அதன் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மருத்துவர். இரா. ஸ்டாலின் IPS உத்தரவிட்டிருந்தார்கள்

இந்நிலையில் புதுக்கடை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ஜஸ்டின் ராஜ் என்பவருக்கு சொந்தமான நிதி நிறுவனத்தில் நீதிவலை பத்திரிக்கையின் நிருபர்கள் என்றுக்கூறி, புகார்தாரரின் நிதி நிறுவனத்தில் அதிகப்படியான வட்டி வாங்குவதாக புகார் வந்துள்ளது,

இது தொடர்பாக பத்திரிக்கையில் அவதூறு செய்தி வெளியிடாமல் இருக்க ஒரு லட்ச ரூபாய் தரவேண்டும் எனக்கேட்டு மிரட்டி உள்ளனர். பணம் கொடுக்க மறுத்த ஜஸ்டின் ராஜ்யை அச்சுறுத்தி சட்டை பையில் இருந்த ரூபாய் 5,000 த்தை எடுத்துவிட்டு தப்பி சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஜஸ்டின் ராஜ் அவர்கள் கொடுத்த புகாரின் பேரில் குலசேகரத்தை சேர்ந்த ஆன்றனி (51), கொல்லங்கோடு பகுதியை சேர்ந்த சுனில் (33), கருவாவிலை பகுதியை சேர்ந்த லால் (36), ஆற்றங்கரை பகுதியை சேர்ந்த செல்வராஜா (37), கன்னியாகுமரி பகுதியை சேர்ந்த சுரேஷ் கோபி (52), திருவட்டார் பகுதியை சேர்ந்த பெல்வின் ஜோஸ் (41), கீழபெருவிளை பகுதியை சேர்ந்த மணிகண்டன் (38) மற்றும் சின்ன முட்டம் பகுதியை சேர்ந்த சகாய போஸ்கோ (58) ஆகியோர் மீது புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து அவர்கள் எட்டு பேரையும் கைது செய்தனர்.

பத்திரிக்கை நிருபவர்கள் எனக் கூறி இவ்வாறு பணம் பறிக்கும் செயலில் ஈடுபட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எச்சரித்துள்ளார்

# சென்னையில் 8ம் தேதி பொது விநியோக திட்ட மக்கள் குறைதீர் முகாம்

சென்னை, மார்ச். 6

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

பொது விநியோகத் திட்டத்தின் பயன்களை குடிமக்கள் எளிதில்பெறும்வகையில்தமிழ்நாடுமுழுவதும்ஒவ்வொரு வட்டத்திலும் மக்கள் குறைதீர் முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி மார்ச் 2025 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் சென்னையில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 19 மண்டல உதவி ஆணையாளர் அலுவலகங்களில் வருகிற 8ம் தேதி அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை நடைபெறவுள்ளது.

குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம், முகவரி மாற்றம், கைபேசி எண் பதிவு / மாற்றம் செய்தல் உள்ளிட்ட பொது விநியோகத் திட்டம் தொடர்பான சேவைகள் மேற்கொள்ளப்படும். மேலும், நியாய விலைக் கடைகளில் பொருள் பெற நேரில் வருகை தர இயலாத மூத்த குடிமக்கள் உள்ளிட்டோருக்கு அங்கீகாரச் சான்று வழங்கப்படும்.

மேலும், பொது விநியோகக்கடைகளின் செயல்பாடுகள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளில் குறைபாடுகள் குறித்த புகார்கள் ஏதேனும் இருப்பின் அவற்றை பொதுமக்கள் இம்முகாமில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

சென்னையிலுள்ள 19 மண்டல அலுவலகப் பகுதிகளில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வார இறுதி நாட்களை முன்னிட்டு 677 சிறப்பு பஸ்கள் இயக்கம்



சென்னை, மார்ச். 6

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:

வார இறுதி நாள்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் (மாா்ச் 8, 9) சென்னையில் இருந்து இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களில் இருந்து தினசரி இயக்கப்படும் பஸ்களுடன் கூடுதலாக சிறப்பு பஸ்களை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகா்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூா், சேலம், ஈரோடு, திருப்பூா் ஆகிய இடங்களுக்கு வெள்ளிக்கிழமை (7ந்தேதி) 265 பஸ்களும், சனிக்கிழமை (8ந்தேதி) 270 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதுபோல, கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூா், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் தலா 51 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், மாதவரத்தில் இருந்து வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் தலா 20 பஸ்கள் என ஆக மொத்தம் 677 சிறப்புப் பஸ்கள் இயக்கப்படவுள்ளன.

இது மட்டுமன்றி, ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊா்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூரு திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களில் இருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

# ஜெக்ஜித் சிங் டல்லேவாலுக்கு எதுவும் நேர்ந்தால் இந்தியா முழுவதும் புரட்சி வெடிக்கும் பி.ஆர்.பாண்டியன்




தஞ்சாவூர், மார்ச். 6

குறைந்தபட்ச ஆதார விலை சட்டம் உள்ளிட்டவற்றை மத்திய அரசு நிறைவேற்ற வலியுறுத்தி பஞ்சாப்அரியானா மாநில எல்லையான கனூரி பார்டரில் சம்யுத்த கிசான் மோர்சா (அரசியல் சார்பற்றது) அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஜெக்ஜித் சிங் டல்லேவால் சாகும் வரை உண்ணாவிரத போராட்டத்தை 2024, நவம்பர் 26ந்தேதி முதல் மேற்கொண்டு வருகிறார்.

சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் ஜெக்ஜித் சிங் டல்லேவால் இன்றுடன் (5ந்தேதி) 100 நாட்களை எட்டியுள்ளது. இவரது போராட்டத்தை ஆதரித்தும், மத்திய அரசு உடனடியாக நீதி வழங்க கோரியும், சம்யுத்த கிசான் மோர்சா (அரசியல் சார்பற்றது) அமைப்பு சார்பில் தஞ்சை ரெயிலடியில் இன்று (புதன்கிழமை) காலை உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தை தொடங்கி வைத்து சம்யுத்த கிசான் மோர்சா (அரசியல் சார்பற்றது) அமைப்பின் தமிழக ஒருங்கிணைப்பாளர் பி.ஆர்.பாண்டியன் நிருபர்களிடம் கூறியதாவது:

மத்திய அரசு குறைந்த பட்ச ஆதார விலை நிர்ணய சட்டம் கொண்டுவர வேண்டும், விவசாயிகள் பெற்ற கடன் முழுவதையும் தள்ளுபடி செய்ய வேண்டும், விவசாயிகளை தற்கொலையில் இருந்து பாதுகாக்க வேண்டும்,

இதனை வலியுறுத்தி சண்டிகரில் இருந்து டெல்லி நோக்கி பேரணியாக புறப்பட்ட சம்யுத்த கிசான் மோர்சா (அரசியல் சார்பற்றது) அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஜெக்ஜித் சிங் டல்லேவால் தலைமையிலான விவசாயிகள் பேரணியை அரியானா மாநில எல்லையில் துணை ராணுவப் படை தடுத்து நிறுத்தியது.

அப்போது நடந்த துப்பாக்கி சூட்டில் 7 விவசாயிகள் உயிரிழந்தனர். ஆனாலும், தொடர்ந்து ஆயிரக்கணக்கான விவசாயிகள் டிராக்டரை கொண்டு வந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த அமைப்பின் தேசிய ஒருங்கிணைப்பாளர் ஜெக்ஜித் சிங் டல்லேவால் சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டு வருகிறார். போராட்டம் இன்று 100 வது நாளை எட்டியுள்ளது.

இதற்கு ஆதரவாக இந்தியா முழுவதும் 100 இடங்களில் விவசாயிகள் உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டுள்ளனர்.

அதன்படி, தமிழகத்தில் தஞ்சையில் விவசாயிகள் அனைவரும் திரண்டு உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். சாகும் வரை உண்ணாவிரத போராட்டம் மேற்கொண்டு தற்போது சிகிச்சையில் இருக்கும் ஜெக்ஜித் சிங் டல்லேவால் உயிருக்கு எதுவும் நேர்ந்தால் இந்தியா முழுவதும் புரட்சி வெடிக்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சிவாஜி வீடு வழக்கு மனுத்தாக்கல் செய்ய நீதிமன்றம் அனுமதி




சென்னை, மார்ச். 6

'ஜகஜால கில்லாடி' திரைப்படத் தயாரிப்புக்காக நடிகர் சிவாஜி கணேசனின் பேரன் துஷ்யந்தின் நிறுவனம் வாங்கிய கடனை திருப்பி செலுத்தாதது தொடர்பான வழக்கில் நடிகர் சிவாஜி கணேசனின் வீட்டை ஜப்தி செய்ய சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து இருந்தது.

இந்த நிலையில், சிவாஜி வீட்டை ஜப்தி செய்யுமாறு பிறப்பித்த உத்தரவை செய்ய சிவாஜி கணேசனின் மூத்த மகன் ராம்குமார் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ராம்குமார் தரப்பில், சிவாஜி கணேசனின் அன்னை இல்லம் நடிகர் பிரபுவுக்கு சொந்தமானது என தெரிவிக்கப்பட்டது.

இதனை தொடர்ந்து கடன் பிரச்சனைக்கு தீர்வு காணும்படியும் ஜப்தி உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுத்தாக்கல் செய்யவும் உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கி உள்ளது.

# தருமபுரி அருகே சரக்கு லாரி மீது சொகுசு கார் மோதி முன்னாள் அ.தி.மு.க. கவுன்சிலர் உள்பட 3 பேர் பலி



பாலக்கோடு, மார்ச். 6

தருமபுரி அருகே தேசிய நெடுஞ்சாலையில் நின்று கொண்டிருந்த சரக்கு லாரி மீது சொகுசு கார் மோதி ஒசூர் முன்னாள் அ.தி.மு.க. கவுன்சிலர் உள்பட 3 பேர் பலியாகினர். ஒகேனக்கல்லுக்கு சென்றுவிட்டு வீடு திரும்பியபோது 3 பேரும் விபத்தில் சிக்கிய சம்பவம் உறவினர்கள் இடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அலசநத்தம் பகுதியை சேர்ந்தவர், அ.தி.மு.க. முன்னாள் கவுன்சிலர் முனிகிருஷ்ணன் (வயது50). இவர் தனது நண்பர்களுடன், தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல் பகுதிக்கு சென்று வீடு திரும்பி கொண்டு இருந்தனர்.

இவர்களுடன் காரில் அதே பகுதியைச் சேர்ந்த சீனிவாஸ் (47), பசவராஜ் (38) மஞ்சுநாத் (47), சந்திரப்பா (50) ஆகியோர் காரின் பின் இருக்கையில் அமர்ந்து வந்தனர்.

அந்த கார் இன்று காலை தருமபுரி அருகே மகேந்திரமங்கலம் அருகே ஜிட்டாண்டஅள்ளி புதிய தேசிய நெடுஞ்சாலை பிரிவு பகுதியில் வந்தது. அப்போது சாலை தடுப்புச் சுவரில் மோதி பின்பு அங்கு சாலையோரம் நின்று கொண்டிருந்த சரக்கு லாரி மீது கார் எதிர்பாராதவிதமாக மோதி விபத்துக்குள்ளானது.

இதில், காரை ஓட்டி வந்த முனிகிருஷ்ணன், சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தார். உடனே சம்பவ இடத்தில் ஏராளமான பொதுமக்கள் திரண்டனர்.

அப்போது விபத்து குறித்து மகேந்திரமங்கலம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

உடனே சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் உயிரிழந்த முனிகிருஷ்ணன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் காரில் பயணித்தவர்கள் பலத்த காயங்களுடன் ஆம்புலன்ஸ் மூலம் மீட்டு பாலக்கோடு அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். பின்னர் காயம் அடைந்தவர்களை மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த பசவராஜ் மற்றும் சீனிவாஷ் சிறிது நேரத்தில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இதைத்தொடர்ந்து மகேந்திரமங்கலம் போலீசார் விபத்தில் உயிரிழந்த பசவராஜ் மற்றும் சீனிவாஸ் ஆகிய 2 பேரின் உடல்களையும் மீட்டு தருமபுரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். சரக்கு லாரி மீது மோதி 3 பேர் பலியான சம்பவம் அவர்களது உறவினர்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# பெண்ணிடம் கந்துவட்டி கேட்டு மிரட்டல்4 பேர் கைது

நெல்லை, மார்ச். 6

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம், வி.கே.புரம் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களில் சிவந்திபுரம் அருகே உள்ள புலவன்பட்டிகட்டபொம்மன் தெருவை சேர்ந்த சுரேஷ் (வயது 27) என்பவர் நிதி நிறுவனம் நடத்தி வருகிறார்.

அவருடன் சேர்ந்து அம்பை ஊர்காடு பகுதியை சேர்ந்த அசோக்ராஜா (30), வி.கே.புரம் கம்பலத்தார் தெருவை சேர்ந்த செல்வகுமார் (21), கல்லிடைக்குறிச்சி சுப்பிரமணியபுரம் யாதவர் தெருவை சேர்ந்த சங்கர் ராஜா ஆகிய 3 பேர் நிதி நிறுவனம் நடத்தி கந்து வட்டி வசூலிப்பதாகவும், நிதி நிறுவனத்தி

ற்கு உரிய அனுமதியை அவர்கள் பெறவில்லை எனவும் புகார்கள் எழுந்தது.

இந்நிலையில் வி.கே.புரம் கட்டப்புளி தெருவை சேர்ந்தவர் சுரேஷ் என்ற கூலி தொழிலாளியின் மனைவி ரேவதி என்பவர் உடல்நலக்குறைவால் சிகிச்சை பெறுவதற்காக நிதி நிறுவனம் நடத்தி வரும் சுரேசிடம் கடன் பெற்றுள்ளார்.

அவர் கடன் தொகையை செலுத்த தாமதமானதால், கடன் கொடுத்த நிதி நிறுவனத்தினர் அவர் வீட்டின் வாசலில் அமர்ந்து கொண்டு அவதூறாக பேசி மிரட்டியதாக கூறப்படுகிறது.

இதனால் மன வேதனை அடைந்த ரேவதி வி.கே.புரம் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தார். அதன் பேரில் விசாரணை நடத்திய போலீசார் உரிய அனுமதியின்றி நிதி நிறுவனங்களை நடத்தியதாக கூறி சுரேஷ் உட்பட 4 பேரை கைது செய்தனர்.

# அரசுப்பள்ளி விழாவில் பா.ம.க. துண்டுடன் நடனமாடிய மாணவர்கள்



கிருஷ்ணகிரி, மார்ச். 6

கிருஷ்ணகிரி மாவட்டம் சோப்பனூர் கிராமத்தில் அரசுப்பள்ளியில் ஆண்டு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் 'மறுமலர்ச்சி' படத்தில் வரும் சாதியை குறிப்பிடும் பாடலுக்கு மாணவர்கள் பா.ம.க. துண்டுடன் நடனமாடினர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

மேலும் மறைந்த காடுவெட்டி குரு, வீரப்பன் படம் பொறித்த டி சர்ட் பயன்படுத்தப்பட்டதால் சர்ச்சை எழுந்துள்ளது.

பா.ம.க. துண்டுடன் சாதி பாடலுக்கு நடனமாட செய்ததால் மாணவர்களின் பெற்றோர் ஆத்திரமடைந்துள்ளனர்.

இந்த சம்பவத்தையடுத்து பள்ளியில் குவிந்த மாணவர்களின் பெற்றோர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். மேலும் மாணவர்களை பள்ளிக்கு அனுப்ப மறுப்பு தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

5 மார்ச் 2025 12:30 PM

தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான வரைவு தீர்மானத்தை முன்மொழிந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

அனைத்து கட்சி கூட்டத்திற்கு 63 கட்சி, இயக்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் 58 கட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

தொகுதி மறுசீரமைப்பு குறித்து முக்கிய முடிவு எடுப்பதற்காக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில், சென்னை தலைமைச்செயலகத்தில் அனைத்துக்கட்சி கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் தொகுதி மறுசீரமைப்பு தொடர்பான வரைவு தீர்மானத்தை முன்மொழிந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

அனைத்து கட்சி கூட்டத்திற்கு 63 கட்சி, இயக்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில் 58 கட்சி பிரதிநிதிகள் பங்கேற்றனர். கூட்டத்தில் 5 கட்சிகள் மட்டும் பங்கேற்கவில்லை. பா.ஜ.க., நாம் தமிழர் கட்சி, தமிழ் மாநில காங்கிரஸ், புதிய தமிழகம் கட்சி, புதிய நீதிக்கட்சி உள்ளிட்ட 5 கட்சிகள் புறக்கணித்துள்ளன.

# செங்கோட்டையன் முன்னிலையில் அ.தி.மு.க.வினர் அடிதடி பரபரப்பு



ஈரோடு, மார்ச். 6

ஈரோடு மாவட்டம் கோபியில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் முன்னிலையில் அ.தி.மு.க.வினர் அடிதடியில் ஈடுபட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கோபியில் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தலைமையில் 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலுக்கான செயல்வீரர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

அப்போது, அந்தியூர் நிர்வாகிகளுக்கு எந்த கூட்டத்திற்கும் அழைப்பு விடுக்கப்படுவது இல்லை என்று கட்சி நிர்வாகி ஒருவர் புகார் கூறியதாக தெரிகிறது. அப்போது இரு தரப்பினர் இடையே வாக்குவாதம் முற்றிய நிலையில், அது கைகலப்பாக மாறியது. இந்நிலையில் அந்த நிர்வாகியை செங்கோட்டையன் ஆதரவாளர்கள் தாக்கி விரட்டியதாக கூறப்படுகிறது.

இதனிடையே, புகார் கூறியவரை செங்கோட்டையன் மேடைக்கு அழைத்துப் பேசியதாக கூறப்படும் நிலையில், திட்டமிட்டு மோதல் உருவாக்கப்பட்டது என முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் குற்றம்சாட்டியுள்ளார்.

# நகராட்சி கூட்டம்: அடிப்படை வசதிகள் கேட்டு கவுன்சிலர்கள் உள்ளிருப்பு போராட்டம்



மேட்டுப்பாளையம், மார்ச். 6

மேட்டுப்பாளையம் அருகே காரமடை நகராட்சியில் மாதாந்திர கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தலைவர் உஷா வெங்கடேஷ் தலைமை தாங்கினார். ஆணையாளர் மதுமதி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் நகராட்சி கவுன்சிலர்கள் அனைவரும் பங்கேற்றனர். கவுன்சிலர்கள், மாதந்தோறும் கூட்டம் நடத்தப்படுவதில்லை. 3 மாதங்களுக்கு ஒரு முறை நடத்தினால் எப்படி மக்கள் பிரச்சனையை பேசுவது. எங்களது வார்டுகளுக்கு தேவையான திட்டங்களை கேட்டும் இதுவரை நிறைவேற்றி தரவில்லை என பேசினர்.

கூட்டத்தில், கவுன்சிலர்கள் சாந்தி, மலர்க்கொடி, வனிதா சஞ்சீவ் காந்தி, காந்தி ஆகியோர் தங்களது வார்டுகளுக்கு அடிப்படை வசதிகள் கேட்டு உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது நகராட்சி அலுவலகத்தில் மின்நிறுத்தம் ஏற்பட்டதால் கூட்ட அரங்கு இருட்டாக காணப்பட்டது. அப்போது வார்டு உறுப்பினர்கள் தங்களது செல்போன் வெளிச்சத்தில் கூட்டத்தை நடத்தினர். இதனால் கவுன்சிலர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

# கல்வி மூலம் கலவரத்தை தூண்டுவதாக புகார் எச்.ராஜா பிதற்றுவதாக சேகர்பாபு தாக்கு



சென்னை, மார்ச். 6

சென்னையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறியதாவது:

கல்வி மூலம் கலவரத்தை தூண்டுவதாக பா.ஜ.க. மூத்த தலைவர் எச்.ராஜா குற்றம்சாட்டி இருப்பது தொடர்பாக இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபுவிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அப்போது அவர்கூறியதாவது:

★ அடையாளம் தெரியாதவர்களுக்கு அடையாளம் தருவதற்கு தயாராக இல்லை. அவர் ஒரு புறம் பிதற்றிக்கொண்டே இருக்கட்டும்.

★ எங்கள் பணி கல்வியில் சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்பதை ஒன்றியத்திலே முதலமைச்சர் அரும்பணியால் நிருபிப்பார்.

★ ஒருகாலத்தில் மாநகராட்சி பள்ளிகளை வெறுத்து ஒதுக்கிய நிலை மாறி இன்றைக்கு மாநகராட்சி பள்ளிகள் வெகுமதி பள்ளிகளாக தமிழகத்தில் நிலவுவதை கல்வியாளர்கள், மாணவர்களுடைய பெற்றோர்களும், மாணவ செல்வங்களும் உணர்ந்து இருக்கிறார்கள்.

★ இதுபோன்ற பிதற்றலுக்கு பதில் கூற தயாராக இல்லை. அதற்கு உண்டான நேரமும் இல்லை.

மீண்டும் பா.ஜ.க.வுடன் கூட்டணி என்று எடப்பாடி பழனிசாமி சூசகமாக கூறியிருப்பது...

★ பக்கத்து வீட்டில் என்ன நடக்கிறது என்று எட்டிப்பார்க்கிற வேலை எங்களுக்கு இல்லை.

★ எங்களது பயணம் சீராக முதலமைச்சர் தலைமையில் உறுதிமிக்க கூட்டணியாக, மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு கூட்டணி பொலிவோடு திகழ்ந்து கொண்டு இருக்கிறது.

★ அதற்கு தலைமை தாங்குகின்ற முதல்வர் ஏதோநேற்று பெய்தமழையில் இன்று முளைத்த காளான் அல்ல. உறுதியோடு 60 ஆண்டு காலம் அரசியல் பயணத்தை மேற்கொண்டவர்.

ராஜ்யசபாசீட் விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி நம்பகத்தன்மை குறித்து...

★ எடப்பாடி சார் இங்கே இருந்து 8 கி.மீ. தூரத்தில் தான் இருக்கிறார். அவரிடமே பதில் வாங்கிக் கொள்ளுங்கள்.

அனைத்துக்கட்சியில் பங்கேற்காத கட்சிகள் குறித்து...

★ தேச நலனில் அக்கறை இல்லாதவர்கள் என்று அர்த்தம்.

★ தமிழை பற்றி, தமிழ் நாட்டை பற்றி, தமிழக மக்களை பற்றி கவலை இல்லாதவர்கள் புறக்கணிப்பதை பெரிதாக எடுத்துக்கொள்ள கூடாது என்று கூறினார்.

# சென்னை மாநகராட்சியில் தூய்மை பணிக்காக 57 புதிய வாகனங்கள் மேயர் பிரியா தொடங்கி வைத்தார்



சென்னை, மார்ச். 6

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தண்டையார்பேட்டை, ராயபுரம், திரு.வி.க. நகர், அண்ணாநகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மற்றும் அடையாறு ஆகிய 7 மண்டலங்கள் முழுவதும் சாலைகள் மற்றும் தெருக்களில் உள்ள கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை அகற்றும் வகையில் கட்டிடக் கழிவுகளை அகற்றும் தீவிரத் தூய்மைப் பணியை 7.1.2025ல் மேயர் பிரியா முதற்கட்டமாக தொடங்கி வைத்தார்.

அதனடிப்படையில், 7.1.2025 முதல் 16.1.2025 வரை 7 மண்டலங்களிலும், இரண்டாம் கட்டமாக 17.1.2025 முதல் திருவொற்றியூர், மணலி, மாதவரம், அம்பத்தூர், வளசரவாக்கம், ஆலந்தூர், பெருங்குடி மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 8 மண்டலங்கள் உட்பட அனைத்து 15 மண்டலங்களிலும் தீவிரமாக கட்டட மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலங்கள் 1 முதல் 15 வரையில் கட்டடக் கழிவுகளை அகற்றும் வகையில் தீவிரத் தூய்மைப் பணிக்காக ஏற்கனவே உள்ள 102 வாகனங்களுடன் கூடுதலாக டிப்பர் லாரிகள், மினி லாரிகள், ஜே.சி.பி. வாகனங்கள், பாப்காட் வாகனங்கள் உள்ளிட்ட 57 புதிய வாகனங்களை இன்று மேயர் பிரியா கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

கடந்த 1.1.2025 முதல் 28.2.2025 வரையிலான இரண்டு மாத காலத்தில் சட்ட விரோதமாக கட்டிட கழிவுகளை கொட்டிய 260 நபர்கள் மீது கண்காணிப்பு படையினரால் ரூ. 13 லட்சம் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி கமிஷனர் ஜெ.குமரகுருபரன், துணை கமிஷனர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மத்திய வட்டார துணை கமிஷனர் கே.ஜெ.பிரவீன் குமார், நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, தலைமைப் பொறியாளர் (பொது) கே.விஜயகுமார், பிரிமியர் பிரிசிசன் சர்பேஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர்சீனிவாசன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கிளாம்பாக்கம் ரெயில் நிலைய பணி மே மாதத்தில் முடிவடையும்



வண்டலூர், மார்ச். 6

சென்னை நகருக்குள் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் வண்டலூரை அடுத்த கிளாம்பாக்கத்தில்இருந்து வெளியூர்களுக்கு செல்லும் அனைத்து பஸ்களும் இயக்கப்பட்டு வருகின்றன.

எனினும் கிளாம்பாக்கத்திற்கு சென்று வருவதில் பயணிகளுக்கு உள்ள சிரமத்தை போக்கும் வகையில் வண்டலூர் ஊரப்பாக்கம் இடையே கிளாம்பாக்கத்தில் புதிதாக ரெயில் நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இதற்கான பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த புதிய ரெயில் நிலையப்பணிக்கு தமிழக அரசு ரூ.20 கோடி ஒதுக்கி உள்ளது.

கிளாம்பாக்கத்தில் ரெயில்கள் நிற்கும் வகையில் 3 நடைமேடைகள் அமைக்கப்பட்டுஉள்ளன. மேலும் ரெயில் நிலைய மேலாளர்அறை, டிக்கெட் கவுண்டர்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் மற்றும் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டு உள்ளது.

தற்போது கிளாம்பாக்கம் புதிய ரெயில் நிலையத்தில் நடைமேடைகள், தண்டவாளங்களில் கற்கள் கொட்டப்பட்டு தயார் நிலையில் உள்ளது. மின் கம்பங்களும் நட்டு மின்வயர்கள் இணைப்புக்கு தயாராக உள்ளது.

ரெயில் நிலையத்தில் மேற்கூரை மற்றும் மின் கம்பி இணைப்பு உள்ளிட்ட சில பணிகள் மட்டுமே இன்னும் முடிக்கப்பட வேண்டி உள்ளது. எனவே புதிய ரெயில் நிலைய பணி வருகிற மே மாதத்தில் முடிவடையும் என்று அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.

கிளாம்பாக்கம் ரெயில் நிலையத்தை ஜூன் அல்லது ஜூலை மாதத்தில் முழுமையாக பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கிளாம்பாக்கம் ரெயில் நிலையம் பயன்பாட்டிற்கு வந்தால் பஸ் நிலையத்திற்கு வரும் பயணிகளுக்கு பெரிதும் கைகொடுக்கும். மேலும் மாநகர பஸ்சில் பயணம் செய்வதை விட மின்சார ரெயிலில் வரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். எனவே கிளாம்பாக்கம் ரெயில் நிலையம் பயன்பாட்டிற்கு வந்த பிறகு இந்த வழித்தடத்தில் கூடுதல் ரெயில்கள் இயக்கப்படும்.

இதுகுறித்து ரெயில்வே அதிகாரி ஒருவர் கூறும் போது, கிளாம்பாக்கம் புதிய ரெயில் நிலையப்பணியில் 50 சதவீதத்திற்கு மேல் முடிந்து விட்டது. வருகிற மே மாதத்திற்குள் முழு பணியையும் முடிக்க திட்டமிட்டு உள்ளோம். இதற்கான வேலைகள் வேகமாக நடந்து வருகிறது என்றார்.

இதேபோல் கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இருந்து புதிதாக கட்டப்படும் கிளாம்பாக்கம் ரெயில் நிலையத்திற்கு பயணிகள் எளிதில் சென்று வரும் வகையில் ஜி.எஸ்.டி. சாலையை கடந்து உயர் மட்ட நடைமேம்பாலம் ரூ. 74.50 கோடி செலவில் அமைக்கும் பணி கடந்த சில மாதங்களுக்கு முன்பு தொடங்கப்பட்டது.

இந்த பணியும் விரைவில் முடிந்து பயன்பாட்டுக்கு வரும் போது கிளாம்பாக்கம் புதிய பஸ்நிலையத்திற்கு பயணிகள் எந்த சிரமமும் இன்றி சென்று வர முடியும்.

# அப்பல்லோ ஆஸ்பத்திரியில் தயாளு அம்மாளுக்கு தொடர் சிகிச்சை



சென்னை, மார்ச். 6


தற்போது தயாளு அம்மாளுக்கு சளி தொல்லை குறைந்து உள்ளதாக தெரிகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தாயார் தயாளு அம்மாள் உடல் நலக் குறைவு காரணமாக அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தநிலையில், அவருக்கு தொடர்சிகிச்சைஅளிக்கப்பட்டு வருகிறது.

அவரது உடல்நிலையை மருத்துவர்குழுவினர்கண்காணித்து வருகின்றனர். தற்போது தயாளு அம்மாளுக்கு சளி தொல்லை குறைந்து உள்ளதாக தெரிகிறது.

அடுத்த சில நாட்களுக்கு மருத்துவ சிகிச்சை வழங்கி அதன் பிறகு தயாளு அம்மாளை வீட்டுக்கு அனுப்புவது குறித்து முடிவு செய்யப்படும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

# முல்லைப்பெரியாறு அணையில் 22ந்தேதி நடக்கிறது தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணைய குழுவின் முதல் ஆய்வு



கூடலூர், மார்ச். 6

கேரள எல்லைப்பகுதியில் அமைந்துள்ள முல்லைப்பெரியாறு அணை மூலம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 14707 ஏக்கரில் இரு போக நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது.

மேலும் முக்கிய குடிநீர் ஆதாரமாகவும் திகழ்ந்து வருகிறது. அணையின் நீர் மட்டத்தை 142 ஆக உயர்த்திக்கொள்ளவும், பேபி அணையை பலப்படுத்திய பிறகு 152 அடி வரை தண்ணீர் தேக்கிக் கொள்ளலாம் என கடந்த 2014ம் ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆனால் பேபி அணையை பலப்படுத்த தமிழக அதிகாரிகள் எடுத்து வரும் நடவடிக்கைக்கு கேரள அரசு தொடர்ந்து இடையூறு செய்து வருகிறது. கடந்த ஆண்டு அக்டோபர் 1ந்தேதி முல்லைப்பெரியாறு அணை தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது.

ஆணையத் தலைவர் அனில் ஜெயின் தலைமையிலான இந்தக்குழுவின் தமிழக நீர் வளத்துறை செயலர் மங்கத்ராம் சர்மா, காவிரி தொழில்நுட்பக் குழு தலைவர் சுப்பிரமணியன், கேரள அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர் விஸ்வாஸ், நீர் வளத்துறை தலைமைப் பொறியாளர் மற்றும் தொழில்நுட்ப வல்லுனர்கள் என 7 பேர் இடம்பெற்றுள்ளனர்.

இங்கு 7ந்தேதி குழு ஆய்வு நடத்துவதாக இருந்த நிலையில் தற்போது 22ந்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையக்குழு அமைக்கப்பட்ட பிறகு நடைபெறும் முதல் ஆய்வு இதுவாகும். அணை தொடர்பான பிரச்சனைகளுக்கு 4 வாரங்களில் அறிக்கை தாக்கல் செய்யுமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட நிலையில் இந்த ஆய்வு முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இதன் மூலம் பல ஆண்டுகளாக தொடரும் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து பெரியாறு வைகை பாசன விவசாய சங்க ஒருங்கிணைப்பாளர் அன்வர் பாலசிங்கம் கூறுகையில், உச்சநீதிமன்ற உத்தரவை செயல்படுத்த வேண்டும். மழை நேரங்களில் தரைப்பாதையில் வல்லக்கடவு வழியாக அணைப்பகுதிக்கு செல்ல முடியாது. எனவே தமிழக படகுகளை தடையின்றி இயக்க அனுமதிக்க வேண்டும். அணை குறித்து கேரளாவின் விஷம பிரசாரத்தைதடுத்துநிறுத்த வேண்டும். உச்சநீதிமன்ற தீர்ப்பு படி 152 அடியாக அணையின் நீர்மட்டத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி 21 ந்தேதி கம்பத்தில் இருந்து குமுளிக்கு பேரணி நடத்த திட்டமிட்டுள்ளோம் என்றார்.

# வேப்பமரத்தில் பால் வடிந்ததால் பரபரப்பு: வியந்து பார்த்து செல்லும் பொதுமக்கள்



ஸ்ரீவைகுண்டம், மார்ச். 6

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே பெருங்குளம் அமைந்துள்ளது. இந்த ஊருக்கு மேல்புறத்தில் சிவகளைக்கும், பெருங்குளத்துக்கும் இடையே குளம் உள்ளது.

இந்த குளத்துக்கரை பகுதியில் உள்ள ஒரு வேப்பமரத்தில் இருந்து நேற்று மாலை பால் வடிந்துள்ளது.

இதை அந்த வழியாகச் சென்றவர்கள் அருகே உள்ள ஊர்மக்களிடம் கூறியுள்ளனர்.

இதையடுத்து அங்கு வந்த ஊர்மக்கள் அம்மன் விரும்பும் மரமான வேப்பமரத்தில் இருந்து பால் வருவதை பார்த்து அம்மன் தான் இதை உருவாக்கி உள்ளார் என்று அந்த மரத்தை சுற்றி சந்தனம் குங்குமம் தேய்த்து சூடம் ஏற்றி வழிபாடு செய்துள்ளனர். தொடர்ந்து நேற்றும் பால் வடிந்ததை பார்த்து அவர்கள் வழிபாடு செய்தனர்.

அதை பார்த்து அந்த வழியாகச் சென்ற இளம்பெண் தனது தாயுடன் ஆட்டோவில் வந்துள்ளார்.

இங்கு நின்ற கூட்டத்தை பார்த்து ஆர்வத்துடன் அந்த இடத்தில் இறங்கி சாமி கும்பிட்டு விட்டு சென்றார். அந்த நேரத்தில வேப்பமரத்தில் இருந்து நுரை பொங்கியபடி பால் போன்ற வெள்ளை நிறத்தில் வடிந்தது.

இந்த செய்தி அந்த பகுதியில்உள்ளஅனைத்து கிராமங்களிலும் காட்டுத் தீ போல் பரவவும் ஊர்மக்கள் மற்றும் அந்த வழியாக சாலையில் செல்பவர்கள் என அனைவரும் இறங்கி வேப்பமரத்தில் இருந்து பால் வடிவதை ஆர்வமுடன் பார்த்துச் செல்கின்றனர்.

இதுகுறித்து அந்த பகுதியைச் சேர்ந்த மக்கள் கூறுகையில், வேப்பமரத்தில் இருந்து பால் வடிவது மிகவும் அபூர்வமாகும்.

இது தெய்வ சக்தியான மரம் என்று கூறுகிறார்கள்.

# நாமக்கல் பண்ணைகளில் 2 கோடி முட்டைகள் தேக்கம்



நாமக்கல் , மார்ச். 6

நாமக்கல் மண்டலத்திற்கு உட்பட்ட நாமக்கல், ஈரோடு, திருப்பூர், பல்லடம் உள்பட பகுதிகளில் 6 கோடிக்கும் அதிகமான முட்டை கோழிகள் வளர்க்கப்படுகின்றன.

இந்த கோழிகள் மூலம் தினசரி 5 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.இந்தமுட்டைகள் தமிழகத்தின் சத்துணவு திட்டத்திற்கு தவிர நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த முட்டைகளுக்கான விலையை நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு நிர்ணயிக்கிறது. ஆனாலும்நிர்ணயித்தவிலையை விடமுட்டையைகுறைந்த விலையில் விற்பதாக புகார்எழுந்ததால்அதனை கண்காணிக்க குழுக்களும் அமைக்கப்பட்டு தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் கடந்த மாதம் 26ந்தேதி 490 காசுகளாக இருந்த முட்டை விலை படிப்படியாக சரிந்து தற்போது 380 காசுகளாக உள்ளது. இதனால் கடந்த 8 நாட்களில் மட்டும் முட்டை விலை 110 காசுகள் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த திடீர் விலை சரிவால் பண்ணையாளர்கள் கவலை அடைந்துள்ளனர்.

இந்த திடீர் விலை சரிவுக்கான காரணம் குறித்து முட்டை பண்ணையாளர்கள் கூறியதாவது:

நாமக்கல் மண்டலத்தில் கடந்த ஆண்டு வரை 4 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. ஆனால் தற்போது வெயில் காலம் தொடங்கி உள்ளதால் முட்டை உற்பத்தி படிப்படியாக அதிகரித்து 5 கோடியாக அதிகரித்துள்ளது.

ஆனால் முட்டை உற்பத்தி அதிகரித்த நிலையில் அதற்கேற்றவாறு முட்டை விற்பனை அதிகரிக்கவில்லை. குறிப்பாக குளிர் காலத்தில் முட்டை விற்பனை அதிகரிக்கும், கோடை காலத்தில் முட்டை விற்பனை குறையும், அதே போல வெயில் காலம் தொடங்கி உள்ள நிலையில் முட்டையின் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில் அதன் நுகர்வு குறைந்துள்ளது.

மேலும் ஆந்திர மாநிலம் முட்டை உற்பத்தியில் முக்கிய இடத்தில் உள்ளது. தற்போது ஆந்திராவில் பறவை காய்ச்சல் பரவி வருவதால் முட்டை விலை அங்கு வேகமாக சரிந்துள்ளது. இதனால் அங்குள்ள முட்டைகளை தமிழகத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்யும் நிலை உள்ளது. இதனால் நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலையை குறைக்காவிட்டால் இங்கு கொண்டு வந்து ஆந்திர முட்டைகளை அதிக அளவில் விற்பனை செய்வார்கள். இதனால் நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலையை குறைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

முட்டை விலை குறைந்த பின்னரும், தேவை குறைந்துள்ளதால் நாமக்கல் மண்டலத்தில் உள்ள பண்ணைகளில் 2 கோடிக்கும் அதிகமான முட்டைகள் தேங்கி உள்ளது. இனிவரும் நாட்களில் முட்டைகள் அதிக அளவில் தேங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தேசிய ஒருங்கிணைப்புக்குழு 380 காசுகளுக்கு முட்டை விலையை நிர்ணயித்துள்ளநிலையில் அதை விட குறைவாக 10, 20 காசுகள் குறைத்து முட்டைகளை வியாபாரிகள் கொள்முதல் செய்து செல்கிறார்கள். ஆனாலும் இனி வரும் நாட்களில் முட்டை அதிக அளவில் தேங்க வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்

# மயிலம் அருகே சிக்னல் கோளாறு: சென்னை ரெயில்கள் ஒரு மணி நேரம் தாமதம்




திண்டிவனம், மார்ச். 6

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே உள்ள தென் பசியார் ரெயில்வே பாலம் கீழ் பகுதியில் ரெயில்வே ஊழியர்கள் தண்டவாளத்தை சீர் செய்யும் பணியில் ஈடுபட்டனர். அப்போது தவறுதலாக சிக்னல் ஒயர் கட்டானதால் (டெலி கம்யூனிகேஷன் ஒயர்) சிக்னல் கோளாறு ஏற்பட்டது. இதனால் ரெயில்களை இயக்க முடியவில்லை.

இதுகுறித்த தகவல் கிடைத்ததும் ரெயில்வே ஊழியர்கள்சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து சிக்னல் கோளாறை சரி செய்தனர். அதன் பின்னரே ரெயில்கள் இயக்கப்பட்டது.

சிக்னல் கோளாறு காரணமாக தென் மாவட்டங்களுக்கு செல்லும் ரெயில்களும், சென்னை மார்க்கமாக செல்லும் ரெயில்களும் சுமார் 1 மணி நேரம் தாமதமாக புறப்பட்டு சென்றது. இதனால் பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.

# அ.தி.மு.க. பொதுக்கூட்டத்தில் குடிபோதையில் இடையூறு செய்த தொண்டனால் எரிச்சல் அடைந்த திண்டுக்கல் சீனிவாசன்



இடையகோட்டை, மார்ச். 6

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க. சார்பில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் பிறந்த நாள் பொதுக்கூட்டம் புலியூர் நத்தத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கட்சியின் பொருளாளரும், முன்னாள் அமைச்சருமான திண்டுக்கல் சீனிவாசன் கலந்து கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:

தி.மு.க. ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகளில் தமிழக அரசு கடன் சுமையால் தத்தளிக்கிறது. தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினர் மீதும் ரூ.3.25 லட்சம் கடன் சுமை ஏற்பட்டுள்ளது. குடும்ப தலைவிகளுக்கு ரூ.1000 உரிமைத்தொகை கொடுத்து விட்டு பல்வேறு வரிகள் மற்றும் மின்சாரகட்டணத்தை உயர்த்தி விட்டனர்.

இதனால் ஒவ்வொரு குடும்பத்தினரும் மறைமுகமாக ரூ.8500 கூடுதல் செலவு செய்ய வேண்டி உள்ளது. அ.தி.மு.க. ஆட்சியில் தாலிக்கு தங்கம், மாணவர்களுக்கு லேப்டாப், பெண்களுக்கு மானிய விலையில் ஸ்கூட்டர்கள் போன்ற மக்கள் நலத்திட்டங்கள் அனைவருக்கும் சென்று சேர்ந்தது. ஆனால் தற்போது அந்த திட்டங்களை நிறுத்தி விட்டனர். அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வருவோம் என்று கூறி ஏமாற்றி விட்டனர்.

இதனால் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தி.மு.க. அரசுக்கு எதிராக போராட்டம் நடத்தி வருகின்றனர். மொத்தத்தில் அனைத்து தரப்பு மக்களும் தி.மு.க.வுக்கு சரியான பாடம் புகட்ட தயாராகி உள்ளனர் என்று பேசினார்.

முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் பேசிக்கொண்டிருந்த போதே குடிபோதையில் இருந்த ஒரு தொண்டர் 100 நாள் வேலைக்கு சம்பளம் தரமாட்டிங்கிறாங்க, ஒயின்ஷாப்பில் பாட்டிலுக்கு கூடுதலாக பணம் வாங்குகிறார்கள் அதையும் பேசுங்கள் என சத்தம் போட்டார்.

இதனால் டென்ஷனான திண்டுக்கல் சீனிவாசன் அ.தி.மு.க. தொண்டரை பார்த்து அமைதியாக இருப்பா... எல்லாத்தையும் பற்றி பேசுகிறேன் என கூறி விட்டு அவரை அங்கிருந்து அகற்றுமாறு அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு உத்தரவிட்டார். இந்த சம்பவத்தால் கூட்டத்தில் சிறிது நேரம் சலசலப்பு ஏற்பட்டது.

# கோவையில் ரூ.8 கோடி மதிப்பில் கட்டப்படும் சாடிவயல் யானைகள் முகாம் விரைவில் திறப்பு



வடவள்ளி, மார்ச். 6

கோவை வனக்கோட்டம் போளுவாம்பட்டி வனசரகத்துக்கு உட்பட்ட சாடிவயலில் கடந்த 2012ம் ஆண்டு தற்காலிக யானைகள் முகாம் தொடங்கப்பட்டது.

இந்த முகாமில் பராமரிக்கப்பட்டு வந்த கும்கி யானைகள் மாவட்டத்தில் விளைநிலங்கள் மற்றும் குடியிருப்புகளுக்குள் புகும் காட்டு யானைகளை விரட்ட பயன்படுத்தப்பட்டு வந்தன.

கடந்த 2020ம் ஆண்டு கும்கி யானைகள் ஆனைமலை புலிகள் காப்பகத்தில் உள்ள கோழிகமுத்தி யானைகள் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டன.

அதன்பின்னர் மீண்டும் கும்கியானைகள்கொண்டு வரப்படவில்லை. இதனிடையே மனிதவிலங்கு முரண்பாடுகளை தடுக்கும் வகையில் 2023ம் ஆண்டு சாடிவயலில் ரூ.8 கோடியில் பல்வேறு வசதிகளுடன் கூடிய புதிய யானைகள்முகாம்அமைக்கப்படும் என தமிழக அரசு அறிவித்து.

இதனை தொடர்ந்து 50 ஏக்கர் பரப்பளவில் புதிய யானைகள்முகாம்அமைக்கும் பணி தொடங்கப்பட்டது.

18 புதிய யானைகள் பராமரிப்பு கூடம், 2 கரோல், 2 கி.மீ தொலைவுக்கு சோலார் மின்வேலி, 40 சோலார் விளக்குகள், யானைகள் குளிக்க தண்ணீர் தொட்டி, சிறிய மண் குட்டைகள், யானைகள் குளிப்பதற்கான ஷவர்கள், பாகன்கள், காவடிகள் தங்குவதற்கு 8 தங்கும் அறைகள், சி.சி.டி.வி. கேமரா, யானைகள் முகாமை சுற்றி அகழி ஆகிய பணிகள் நடந்து வருகிறது.

இந்த பணிகள் அனைத்தும் இறுதி கட்டத்தை எட்டியுள்ளது.

இந்த நிலையில் சாடிவயலில் நடந்து வரும் பணிகளை வனத்துறை கூடுதல் தலைமை செயலாளர் சுப்ரியா சாகு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் கூறும்போது, புதிய யானைகள் முகாம் விரைவில் திறக்கப்படும். கோவை மற்றும் போளுவாம்பட்டி வனச்சரகங்களுக்குட்பட்ட பகுதியில், காட்டு யானைகள் ஊருக்குள் புகுவதை தடுக்க, ரூ.7 கோடி மதிப்பில் பாதுகாப்பு வேலி அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை அறிந்து, அதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

முன்னதாக, வனத்துறை மலையேற்றம்திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களை சந்தித்து, இத்திட்டத்தில் உள்ள நிறை, குறைகள் குறித்து கேட்டறிந்தார்.

ஆய்வின் போது, முதன்மை தலைமை வன பாதுகாவலர்கள் ராகேஷ் குமார், சீனிவாச ரெட்டி கோவை மண்டல வன பாதுகாவலர் வெங்கடேஷ், மாவட்ட வன அலுவலர் ஜெயராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.

# நகை வியாபாரியிடம் ரூ.1 கோடி பறிப்பு போலீசார் விசாரணை

காங்கேயம், மார்ச்.6

திருப்பூர் மாவட்டம் காங்கேயம் அடுத்த சம்மந்தம்பாளயைம் பிரிவு அருகே காரை வழி மறித்து நகை வியாபாரியிடம் ரூ.1 கோடி பறித்து சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கரூரை சேர்ந்த நகை வியாபாரி வெங்கடேஷ் (50) நகை வாங்க காரில் கோவைக்கு சென்று கொண்டிருந்த போது சம்மந்தம்பாளையம் பிரிவு அருகே காரை மறித்து 4 பேர் கொண்ட கும்பல் போலீசார் எனக்கூறி ரூ.1 கோடியை பறித்து கொண்டு தப்பியோடி உள்ளனர்.

ரூ.1 கோடியை பறித்து சென்ற சம்பவம் குறித்து காங்கேயம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஜனாதிபதியை சந்திக்க தமிழக அரசு திட்டம்?



சென்னை, மார்ச். 6

தொகுதி மறுசீரமைப்பு குறித்து முக்கிய முடிவு எடுப்பதற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் இன்று சென்னை தலைமைச்செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் காலை 10 மணிக்கு அனைத்துக் கட்சி கூட்டம் தொடங்குகிறது. இந்த அனைத்துக்கட்சி கூட்டத்தில் பங்கேற்க 45 கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஆனால் இன்று நடைபெறும் அனைத்து கட்சி கூட்டத்தை புறக்கணிப்பதாக பா.ஜ.க., த.மா.கா., நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட கட்சிகள் ஏற்கனவே அறிவித்துவிட்டன.

அதே நேரத்தில், அ.தி.மு.க., அ.ம.மு.க., தமிழக வெற்றிக்கழகம் உள்ளிட்ட கட்சிகள் பங்கேற்பதாக தெரிவித்துள்ளன.

இதனை தொடர்ந்து, இன்று நடைபெற உள்ள அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு பின்னர் ஜனாதிபதி திரவுபதி முர்முவை சந்திக்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

தொகுதி மறுவரையறைக்கு எதிரான அனைத்துக்கட்சி கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை ஜனாதிபதியிடம் அளிக்க திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

# சென்னையில் 28 கிலோ தங்கம் பறிமுதல் 4 பேரிடம் போலீசார் விசாரணை



சென்னை, மார்ச். 6

சென்னை மெரினாவில் 28 கிலோ தங்கம் போலீசாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பைஏற்படுத்திஉள்ளது.

மெரினாவில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டு வந்தனர். அப்போது காரில் எடுத்து வரப்பட்ட தங்கத்தை போலீசார் பறிமுதல் செய்துள்ளனர்.

தங்கத்தை காரில் கொண்டு வந்த பிரகாஷ், கிரண், அணில், பால் ஆகிய 4 பேரை பிடித்து அண்ணா சதுக்கம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## நானிக்கு அம்மாவாக தெலுங்கில் அறிமுகமாகும் பிரபல பாலிவுட் நடிகை




இந்தி மற்றும் மராத்தி மொழி சினிமாவில் பிரபல நடிகையான இருப்பவர் சோனாலி குல்கர்னி. இவர் பல பாலிவுட் பிளாக்பஸ்டர்களில் நடித்திருக்கிறார். அதில், "தில் சாஹ்தா ஹை" (2001), சிங்கம் (2011) ஆகியவை அடங்கும். இந்தி, மராத்தி மட்டுமில்லாமல் தமிழில் மே மாதம் என்ற படத்திலும் இவர் நடித்திருக்கிறார்.

இந்நிலையில், ஸ்ரீகாந்த் ஒடேலா இயக்கத்தில் நானி நடிக்கும் "தி பாரடைஸ்" படத்தின் மூலம் இவர் தெலுங்கில் அறிமுகமாக இருக்கிறார். இப்படத்தில், சோனாலி குல்கர்னி, நானிக்கு அம்மாவாக நடித்துள்ளதாக தெரிகிறது.

எஸ்.எல்.வி. சினிமாஸ்தயாரிக்கும் இப்படத்திற்குஅனிருத் இசையமைக்கிறார். பிரம்மாண்டமான பொருட்செலவில் உருவாகும் இப்படம் அடுத்த ஆண்டு மார்ச் 26ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

## அல்லு அர்ஜுன் அட்லீ படத்தில் 5 ஹீரோயின்களா?



தமிழ் திரையுலகில் இருந்து இன்று பாலிவுட் திரையுலகம் வரை சென்றுள்ள முன்னணி இயக்குனர் அட்லீ. ராஜா ராணி படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமான இவர் விஜய்யை வைத்து "தெறி, மெர்சல், பிகில்" ஆகிய ஹிட் படங்களை கொடுத்து பிரபலமானார்.

பின்னர் பாலிவுட்டில் கலமிறங்கிய அட்லீ, ஷாருக்கானை வைத்து இயக்கிய 'ஜவான்' படம் ரூ.1,200கோடிவசூல்செய்துசாதனைபடைத்தது. தற்போது அட்லீ, அல்லு அர்ஜுனை இயக்க உள்ளதாகவும், இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரிக்கப் போவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில், இப்படத்தில் 5ஹீரோயின்கள்நடிக்கஉள்ளதாககூறப்படுகிறது.

அட்லீயின் ஸ்கிரிப்ட்டின்படி, படத்திற்கு ஐந்து ஹீரோயின்கள் தேவைப்படுவதாக தெரிகிறது. அதில், அமெரிக்க, கொரிய உள்ளிட்ட மூன்று மொழி நடிகைகளை முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்க வைக்க அட்லீ யோசித்து வருகிறார்.

மேலும், முக்கிய ஹீரோயின்களாக ஜான்வி கபூரும், மற்றொரு இந்திய நடிகையும் நடிப்பார்கள் என்று கூறப்படுகிறது.

இதுமட்டுமில்லாமல் இப்படத்தில் அல்லு அர்ஜுனுடன் மற்றொரு நடிகரும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக தெரிகிறது.

## தெலுங்கில் அறிமுகமாகும் சோனாக்சி சின்கா?



பாலிவுட்டில்முன்னணிநடிகையாகஇருப்பவர் சோனாக்சி சின்கா. கடந்த 2010ம் ஆண்டு வெளியான 'தபாங்' படத்தில் நடித்து சினிமாவில் அறிமுகமான இவர், கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியான 'லிங்கா'படத்தில்நடித்துதமிழில்அறிமுகமானார்.

இந்நிலையில், சோனாக்சி சின்கா தெலுங்கில் அறிமுகமாக இருப்பதாக தகவல் வெளியாகி இருக்கிறது. வெங்கட் கல்யாண் இயக்கி வரும் படம் 'ஜடதாரா'. இப்படத்தில் சுதீர் பாபு கதாநாயகனாகநடிக்கிறார். இதில், கதாநாயகியாக பாலிவுட் நடிகை சோனாக்சி சின்கா ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளாதாக தெரிகிறது. மேலும், இப்படப்பிடிப்பில், வருகிற 8ம் தேதி சோனாக்சி இணைவார் என்றும் கூறப்படுகிறது.

## சாம்பியன்ஸ் டிராபியில் தோல்வி: ஓய்வை அறிவித்தார் ஆஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் சுமித்



9வது ஐ.சி.சி. சாம்பியன்ஸ் கோப்பை கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடந்து வருகிறது. இதில் நேற்று பகல்இரவு மோதலாக அரங்கேறிய முதலாவது அரைஇறுதியில் 'நம்பர் ஒன்' அணியான இந்தியா, உலக சாம்பியன் ஆஸ்திரேலியாவை எதிர்கொண்டது. பரபரப்பாக நடந்த அரைஇறுதியில் இந்திய அணி ஆஸ்திரேலியாவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இந்நிலையில் சாம்பியன்ஸ் டிராபி தொடரில் அரையிறுதி வரை வந்து தோல்வியை தழுவிய ஆஸ்திரேலிய அணியின் கேப்டன்ஸ்டீவ் சுமித் ஒருநாள் போட்டிகளில் [20102025) இருந்து திடீரென ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். மேலும் டெஸ்ட் மற்றும் டி20 கிரிக்கெட் போட்டிகளில் தொடர்ந்து விளையாட உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். முன்னதாக நேற்று நடந்த இந்தியாவுடனான சாம்பியன்ஸ் டிராபி அரையிறுதி போட்டியில் ஸ்டீவ் சுமித் 73 ரன்கள் எடுத்தார்.

கடந்த 2010ம் ஆண்டு வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு எதிராக லெக் ஸ்பின்னிங் ஆல்ரவுண்டராக அறிமுகமான ஸ்மித் 170 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 43.28 சராசரியுடன் 5,800 ரன்கள் எடுத்துள்ளார். இதில் 12 சதங்கள் மற்றும் 35 அரை சதங்கள் அடங்கும். மேலும் 28 விக்கெட்டுகளையும் ஸ்டீவ் ஸ்மித் வீழ்த்தி உள்ளார்.

2015 மற்றும் 2023ம் ஆண்டுகளில் ஐசிசி ஒருநாள் உலகக் கோப்பை சாம்பியன் பட்டம் வென்ற ஆஸ்திரேலிய அணிகளில்ஸ்மித் இடம்பெற்றிருந்தார். 2015 இல் ஒருநாள்கிரிக்கெட் அணியின் கேப்டனாக ஆனார். நடப்பு சாம்பியன்ஸ் டிராபி தொடரில் பேட் கம்மின்ஸ் காயமடைந்து விளையாட முடியாமல் போனதால், இடைக்கால கேப்டன் பதவியை வகித்தார்

2027 ஒருநாள் உலகக் கோப்பைக்கு தொடரின்போது ஸ்டீவ் ஸ்மித்தின் வயது 38 ஆக ஆகிஇருக்கும். அப்போது அவர் ஒருநாள் போட்டிகளில் விளையாடும் நிலையில் இருப்பாரா என்பது நிச்சயம் இல்லை. இதனால், இளம் வீரர்களுக்கு வாய்ப்பு வழங்குவதை மனதில் வைத்து ஓய்வு முடிவை அறிவித்துள்ளார்.

ஸ்மித்தின்முடிவுகுறித்துதேர்வுக்குழுத்தலைவரானஜார்ஜ்பெய்லிகூறுகையில், "ஒருநாள்சர்வதேசகிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் ஸ்டீவின் முடிவை நாங்கள் முழுமையாகப் புரிந்துகொண்டு ஆதரிக்கிறோம். ஸ்டீவ் பல சந்தர்ப்பங்களில் தனது மீதமுள்ள விளையாட்டு வாழ்க்கையை ஒவ்வொரு தொடராக அணுகுவதாகக் கூறியுள்ளார், இந்த நிலைப்பாடு மாறவில்லை, மேலும் அவரின் இந்த முடிவுக்கு கிரிக்கெட் ஆஸ்திரேலியா ஆதரிக்கிறது.

167 போட்டிகளில் ஒரு பேட்ஸ்மேனாக அவரது சாதனை முன்மாதிரியானது, மேலும் இரண்டு முறை உலகக் கோப்பையை வென்றவராக இந்த வடிவத்தை விட்டு வெளியேறுவது சிறந்த ஆஸ்திரேலிய ஒருநாள் வீரர்களில் ஒருவராக அவரதுபாரம்பரியத்தைஉறுதிப்படுத்துகிறது, ஸ்டீவ்டெஸ்ட்கிரிக்கெட்டில்முழுமையாகஅர்ப்பணிப்புடன்இருக்கிறார், மேலும் அவர் அணியின் ஒருங்கிணைந்த வீரராகவும் தலைவராகவும் இருக்கிறார்" என்று அவர் தெரிவித்தார்.

## கிரிக்கெட் போட்டிகளில் எந்த கேப்டனும் செய்யாத சாதனையை படைத்த ரோகித் சர்மா

ஐ.சி.சி. சாம்பியன்ஸ் டிராபி தொடரில் துபாயில் நடைபெற்ற முதலாவது அரையிறுதி போட்டியில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா அணிகள் விளையாடின. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்று முதலில் பேட்டிங் செய்த ஆஸ்திரேலிய அணி, 49.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 264 ரன்கள் எடுத்தது. இதனால், 265 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய இந்திய அணி 48.1 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 267 ரன்கள் எடுத்து 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் இந்திய அணி இறுதி போட்டிக்கு முன்னேறியது. இந்த வெற்றியை, பல இடங்களில் மக்கள் உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர். தேசிய கொடியை உயர்த்தி பிடித்தபடியும், பட்டாசுகளை வெடித்தும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர். தொடர்ந்து 3வது முறையாக இறுதி போட்டிக்கு இந்தியா முன்னேறி உள்ளது. மொத்தம் 5வது முறையாக சாம்பியன்ஸ் டிராபி தொடரின் இறுதி போட்டிக்குள் இந்தியா நுழைந்துள்ளது. இதனால், சத்தமின்றி ரோகித் சர்மா புதிய சாதனை ஒன்றை படைத்துள்ளார். அவர், 2022ம் ஆண்டு பிப்ரவரியில் முழுநேர கேப்டன் ஆனார். அப்போது இருந்து பல்வேறு சாதனைகளை இந்தியா படைத்தது. இந்த 3 ஆண்டு காலத்தில், ஐ.சி.சி.யின் ஒவ்வொரு போட்டி தொடரின் இறுதி போட்டிக்கும் இந்தியா முன்னேறியது. இதனால், ஐ.சி.சி.யின் அனைத்து வகையான போட்டி தொடரின் இறுதி போட்டிக்கும் அணியை அழைத்து சென்ற முதல் கேப்டன் என்ற பெருமையை ரோகித் சர்மா பெற்றுள்ளார். இதனால், கிரிக்கெட் போட்டியில் இதுவரை பார்த்திராத சிறந்த கேப்டன்களில் ஒருவராக உருவாகி உள்ளார். 2023ம் ஆண்டில் உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதி போட்டி வரை இந்தியா முன்னேறியது. எனினும், இறுதி போட்டியில் தோல்வியை தழுவியது. அதே ஆண்டில், ஒரு நாள் சர்வதேச உலக கோப்பை கிரிக்கெட் 2023 போட்டி தொடரில் தோல்வியே அடையாமல் இறுதி போட்டிக்கு முன்னேறியது. இதில், இந்திய அணியையும், ரசிகர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் வகையில், 6 விக்கெட் வித்தியாசத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்று கோப்பையை தட்டிச்சென்றது. எனினும், 2024ம் ஆண்டு நடந்த டி20 உலக கோப்பை இறுதி போட்டியின்போது, இந்தவேதனைகளைதுடைத்தெறியும் வகையில், திறமையாக அணியை வழிநடத்தி சென்றார் ரோகித். இதனால், 2007ம் ஆண்டுக்கு பின்னர் முதன்முறையாக கோப்பையை இந்திய அணி வெல்ல உதவினார். அதிலும் எந்தவொரு போட்டியிலும் தோல்வியை தழுவாமல் இந்தியாவுக்கு இந்த வெற்றி கிடைத்தது. ரோகித்தின் சாதனைபட்டியலில், சாம்பியன்ஸ் டிராபி போட்டி தொடர் மட்டும் மீதமிருந்தது. இதிலும், இறுதி போட்டிக்கு இந்திய அணியைதலைமையேற்றுநடத்தி சென்று வரலாறு படைத்துள்ளார்

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.